2013 மார்ச் 28]

பகுதிக்கு புதிய பொறியியல் கல்லூரியை உருவாக்கித் தருவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

95—

வேளாண்மைக் கல்லூரி

***25073**—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மன்னார்குடியில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகள் டெல்டா மாவட்டங்களின் மையப் பகுதிகளாகும். வளர்ந்து வரும் நாகரிக உலகில் விவசாயத்தில் இளைஞர்கள் பெரிதும் ஆர்வம் காட்டாமல் இருப்பது விவசாயம் அழிந்துவிடும் சூழ்நிலைக்கு வித்திடுவதாக உள்ளது. முழுக்க முழுக்க நெல், உளுந்து, கடலை போன்ற பயிர்களையே நம்பி இருக்கும் எங்கள் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கைகளில் இக்கோரிக்கை மிகவும் முக்கியமான ஒன்று. இளைஞர்களுக்கும் விவசாயம் சார்ந்த வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும். விவசாயக் குடும்பங்களில் பிறந்தவர்களாக*

இருப்பதால் அடிப்படையிலேயே விவசாயம் குறித்த அனுபவம் எங்கள் பகுதி இளைஞர்களுக்கு உண்டு. ஆகையால் அவர்கள் விவசாயம் சார்ந்த பாடப் பிரிவுகளில் வெற்றி பெறுவது உறுதி. ஆகவே, இந்த அரசு மன்னார்குடி பகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதிக்கு அருகில் உள்ள திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண் கல்லூரியும், ஒரு மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியும், குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகின்றன. இது தவிர, தஞ்சாவூரில் ஒரு பட்டயக் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. எனவே, மன்னார்குடி தொகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் மேற்கண்ட கல்லூரிகளில் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்பு பெருமளவில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதி மையப் பகுதியாக இருப்பதாலும் அங்கே இளைஞர்கள் அதிகம் வசிப்பதாலும் தான் இந்தக் கேள்வி எழுகிறது. நீடாமங்கலம் பகுதி ஓரத்தூரில் 47 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் விவசாய ஆராய்ச்சி மையம் மற்றும் வேளாண்மைத் துறையின்கீழ் காஞ்சிக்குடிகாட்டில் 49 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள விவசாயப் பண்ணை போன்ற இடங்களில் அரசுக்குத் தேவையான இடங்களும் உள்ளன. மேலும், நீடாமங்கலத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி மையத்திற்கு இரயில் வசதி, தேசிய நெடுஞ்சாலை வசதி மற்றும் பேருந்து வசதி இருப்பதால், தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்து படிப்பதற்கான வசதிகளும் உண்டு. ஆகவே, தஞ்சை, திருவாரூர், நாகை பகுதிகளின் மையப் பகுதியாகத் திகழும் எங்கள் மன்னார்குடி தொகுதியில் இளைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, எதிர்காலத்தில் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபாட்டோடு இருக்க

2013 மார்ச் 28]

மன்னார்குடியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிற இடங்களில் எல்லாம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், அறிவியல் ஆராய்ச்சி நிலையம்போல் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. புதிதாக ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் 100 ஏக்கர் விவசாய நிலமும், 50 கோடி ரூபாய் வரை நிதியும் தேவைப்படுகிறது. இதைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்து, தேவை இருப்பின், நம்முடைய புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

சாலை வசதி

***162—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணியாச்சி சந்திப்பிலிருந்து தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கோவில்பட்டிக்கு நேரடி சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*